MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# கல்வி நிலையை விமர்சிக்கும் கவிப்பேரரசின் கவிதைகள்

**திருமதி மா.முத்து காயத்ரி,**
**உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,**
**தி ஸ்டாண்டர்ட் ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.**
muthugayathri-tam@sfrcollege.edu.in

DOI 10.5281/zenodo.17093374.

**Abstract :**

The development of a country depends on the activities of its people. Many tragedies occur in the country due to the contradictory actions of some people. At such times, some creators emerge to enhance the greatness of the country, give momentum to its progress, remind it of its self-respect, and free it from the darkness of slavery. They depict the true state of the country through their works. They are sculptors who sculpt society in a good way. One person who has earned a special place for himself among such social sculptors is Kaviperarasu Vairamuthu, a native of Vadugapatti, Theni district. This article aims to highlight the state of education criticized by his poetic lines.

**Key Words :** Vairamuthu - Poets - Education - Poverty - Society

## முன்னுரை

ஓர் நாட்டின் வளர்ச்சியானது அந்நாட்டு மக்களின் செயல்பாடுகளைச் சார்ந்தே அமைகிறது . சில மனிதர்களின் முரண்பட்ட செயல்களால் நாட்டில் பல அவலங்கள் நிகழ்கின்றன. இம்மாதிரியான சமயங்களில் நாட்டின் மேன்மைக்கு மெருகேற்றவும் , அதன் நடைக்கு வேகம் கொடுக்கவும் , அதனுடைய சுயநிலையை நினைவுப்படுத்தவும் , அடிமை இருளிலிருந்து விடுவிக்கவும் சில படைப்பாளர்கள் தோன்றுகின்றனர் . இவர்கள் தங்களின் படைப்புகள் மூலம் நாட்டின் உண்மை நிலையை படம்பிடித்துக் காட்டுகின்றனர். இவர்கள் சமூகத்தை நன்முறையில் செதுக்கும் சிற்பிகளாய் திகழ்கின்றனர். இத்தகைய சமுதாயச் சிற்பிகளின் வரிசையில் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பெற்றுத் திகழ்பவர் தேனி மாவட்டம் , வடுகப்பட்டியை சேர்ந்த கவிப்பேரரசு வைரமுத்து ஆவார் . இவர் எழுதிய கவிதை வரிகள் விமர்சித்துள்ள கல்வி நிலையினை எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

## கவிப்பேரரசின் கவிதைகள்

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை மிக அற்புதமாகப் பிரதிபலிக்கின்ற நிழல்காண் மண்டிலமாகும். இலக்கியங்கள் காலச் சூழலின் பல்வேறு பரிணாம வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. அவ்வகையில் கவிப்பேரரசு வைரமுத்து இயற்றிய 11 கவிதைத் தொகுப்புகளிலும் நாட்டில் நிலவும் கல்வி நிலை , வறுமை நிலை , இளைஞர்களின் அலட்சியப்போக்கு , குழந்தைத் தொழிலாளிகளின் நிலை , தீண்டாமை ஆகிய உண்மைநிகழ்வுகளை வைரமுத்து அவர்கள் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

## கல்வி நிலை



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

உலகில் வாழும் பலவகை உயிரினங்களில் இருந்து மனிதனை தனித்துக் காட்டுவது ஆறாவது அறிவான பகுத்தறிவாகும் . ஒரு மனிதனை அறிவுள்ள முழு மனிதனாக்கி அவனை வாழ்வில் பிரகாசிக்க உதவும் தூண்டுகோலாய் திகழ்வது, கல்வி ஒன்றே.

**"ஒரு நாட்டின் உண்மையா ன செல்வம் அதன் தங்கம் , வெள்ளியில் இல்லை . அதன் கல்விப் பெருக்கத்தில் தான் உள்ளது . அதன் ஞானத்தில் தான் உள்ளது. அது தலை நிமிர்ந்த மக்களிடம் தான் உள்ளது"**[1] என்று கலீல் ஜிப்ரான் குறிப்பிடுகின்றார். ஒருவனிடம் அழிவு இல்லாமல் என்றும் நிலைத்திருப்பது கல்விச்செல்வமே என்று வள்ளுவர்,

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**[2]

என்ற குறட்பா வாயிலாக விளக்குகிறார். வைரமுத்து அவர்கள் சமூகத்தில் நிலவும் மழலைக் கல்வி, புத்தகம் - சுமை,தேவையற்ற பாடத்திட்டம் ,மனப்பாடக்கல்வி, தேர்வுக் கூடம் , அறிவை வளர்க்கா கல்வி, வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றை தம் கவிதைகளில் சுட்டிக்காட்டியுள்ளார் . மேலும், மாணவர்களின் கவனச்சிதறலாலும் குடும்ப வறுமை நிலைக் காரணமாக பெற்றோர்கள் குழந்தைகளின் கல்வி நிலையை கவனிக்க முடியாத சூழலில் கவலைப்படும் பெற்றோரின் நிலையினை,

**"இந்தப் பட்டறைகளில் கூர் செய்யக்**
**கடப்பாறைகளைக் கொடுத்தோம் அவை**
**குண்டூசியாய் திரும்பின"**[3] என்ற கவிதை வரிகள் மூலம்

கவிஞர் சுட்டிக் காட்டுகின்றார்.

**மழலைக் கல்வி**

ஐந்து வயதிற்குப் பிறகே முதல் வகுப்பில் சேர்க்கும் நிலை அன்று இருந்தது . இன்றோ, கணவன் - மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் சூழல் இருப்பதால் குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் இரண்டுவயது நிரம்பும் முன்பே பள்ளிக்கு அனு ப்பும் அவலநிலை உள்ளது . பெற்றோரின் அரவணைப்பும் குறைந்துவிடுகிறது. இத்தகையை கல்வி இனிமையில்லாமல் கசப்பான அனுபவத்தை ஏற்படுத்துவதை,

**"அந்தச் சிறுபறவைகளின் இறகுகளை**
**கொள்ளிக் கட்டைகளாலா கோதிவிடுவது?**
**எழுத்துக்களின் ஊர்வலத்தில் அவர்கள்**
**காணாமல் போனார்கள்!"**[4] என்ற கவிதை வரிகள் மூலம்

கவிஞர் மனத்தெளிவை ஏற்படுத்த வேண்டிய கல்வி , மனச்சுமையை ஏற்படுத்துவதை சுட்டிக் காட்டுகின்றார். இக்கருத்தையே மு.மேத்தா,

**"கல்வி இங்கே**
**இதயத்தில் சுமக்கும்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

**இனிமையாய் இல்லாமல்**
**முதுகில் சுமக்கும்**
**மூட்டையாகி விட்டது**
**கொடுமை என்னவென்றால்**
**குழந்தைகளெல்லாம்**
**கூனிகளாயினர்”**[5] - “ஒரு வானம் இரு சிறகு ” என்னும் கவிதைத் தொகுப்பில் குறிப்பிடுகின்றார்.

**பாடத்திணிப்பு**

இளம் சிறுவர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் அவர்களின் மூளைத்திறனுக்கு மேற்பட்டனவாகவே உள்ளன . சிறு வயதிலே தொடக்கப் பள்ளிக்கல்வியில் பல கடினமான கருத்துக்கள் அவர்களுக்கு ஊட்டப்படுகின்றன . குருதித் தலையில் பனங்காயை வைத்தது போல கல்விப்பாடச் சுமையைத் தாங்காமல் அவர்களின் மூளை வளர்ச்சி குன்றி தவித்து போகிறார்கள் . இக்கருத்தை வைரமுத்து,

**“அவர்கள் மூளையில்**
**விதையைப் போல்**
**தூவப்பட வேண்டிய அறிவு**
**ஆணியைப் போல்**
**அறைப்படகிறது.”**[6] என்றும்,
**“இந்தக் கல்வி முறை**
**புதைத்த பிணங்களைத் தோண்டியெடுத்துத்**
**துடைத்துக் கொண்டிருக்கிறது.”**[7] என்ற கவிதை வரிகள் மூலம் கல்வி கற்பிக்கப்படும் முறையில் எழும் அவல நிலையையும் பாதிப்பினையும் சுட்டிக்காட்டுகின்றார். மேலும், **“ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் நிர்ணயிக்கப்படுகி றது”** என்று முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளதற்கு மாறாக , வைரமுத்து அவர்கள் , கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல செய்திகளைத் திணிக்கக் கூடியதாக இருத்தல் கூடாது. அவ்வாறு திணிக்கப்படும் செய்திகள் தொல்லைத் தருமேயன்றிப் பயன் தருவதில்லை. ஊக்கத்தையும் ஒழுக்கத்தையும் ஒன்றுதலையும் தராத கல்விமாணவரிடையே தாழ்வு மனப்பான்மையையே ஏற்படுத்தும்.

**“அவர்களோடு சேர்ந்து துக்கம் கொண்டாடத் தான்**
**வகுப்பறைகளின் சுவர்கள் கரும்பலகையை நெஞ்சில்**
**நிரந்தரமாய் அணிந்தனவோ?”**[8] என்ற கவிதை வரிகள் மூலம் கருப்பு வில்லைத் துணியைத் துக்கம் காட்ட அணிந்து கொள்வது வழக்கம் . அது போல மாணவர்களின் துக்கம் காட்டும் விதமாக வகுப்பறைகளில் கரும்பலகைகள் உள்ளன என இன்றைய கல்வி முறை கடினமான இருப்பது போலவும் பொருத்தமற்றதாக இருப்பது போலவும் உள்ளது என விமர்சிக்கின்றார்,கவிபேரரசு வைரமுத்து.

**முடிவுரை**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

கவிப்பேரரசு வைரமுத்து தம் கவிதைகளில் விமர்சித்துள்ள நாட்டு நடப்புகளுள் முதன்மையான மழலைக் கல்வி , பாடத்திணிப்பு, இன்றைய கல்வி நிலை , பெற்றோரின் வேதனை , மாணவர் மனநிலை ஆகியவற்றை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**சான்றெண் விளக்கம்**

1. கலீல் ஜிப்ரான், ஞானிகளின் தோட்டம், ப.81.
2. திருக்குறள், 400.
3. வைரமுத்து,இன்னொரு தேசியகீதம்,ப.55.
4. வைரமுத்து,இன்னொரு தேசியகீதம்,ப.88.
5. மு.மேத்தா, ஒரு வானம் இரு சிறகு, ப.27.
6. வைரமுத்து,இன்னொரு தேசியகீதம்,ப.88
7. வைரமுத்து,திருத்தி எழுதிய தீர்ப்புகள்,ப.97.
8. வைரமுத்து,இன்னொரு தேசியகீதம்,ப.101.



http://Creativecommons.org//license/by/4.0/.